தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (தனியார்) வரையறுக்கப்பட்டது

வேலைவாய்ப்புகள்

வரையறுக்கப்பட்ட தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (National Credit Guarantee Institution Limited - NCGIL) என்பது இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சித் துறைக்கு (MSME) ஆதரவளிக்கும் நோக்கில் இலங்கை அரசாங்கத்திற்கும் 13 முன்னணி பங்குதாரர் நிதி நிறுவனங்களுக்கும் (Shareholder Financial Institutions - SFIs) இடையிலான அரச-தனியார் பங்காண்மையின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமாகும்.

NCGIL, பங்குபற்றும் நிதி நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாதங்களை வழங்குவதுடன், பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பை மேம்படுத்தும் வகையில், சாத்தியமான நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு (MSMEs) பணப்புழக்கத்தின் அடிப்படையிலான கடன் வழங்கல் முறையை ஊக்குவிக்கிறது.

நாங்கள் அர்ப்பணிப்புடன் செயல்படக்கூடிய, சிறந்த தொடர்பாடல் திறன்களைக் கொண்ட, நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சித் துறை தொடர்பான சிறந்த அறிவும் புரிதலும் உடைய, விடயங்களை நுணுக்கமாகக் கவனிக்கும் திறன் கொண்ட, உயர் செயல்திறனுடன் பணியாற்றுவதோடு, குழு உறுப்பினர்களுடன் இணைந்து இலக்குகளை வெற்றிகரமாக அடையக்கூடிய நபர்களைத் தேடுகின்றோம்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சித் துறையின் (MSME) வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தி, அதன் வளர்ச்சியைத் துரிதப்படுத்த விரும்பும் தகுதியான விண்ணப்பதாரராக நீங்கள் இருந்தால், எங்களுடன் இணையுங்கள்!

முக்கிய தகைமைகள், பணி அனுபவம் மற்றும் பொறுப்புகள்

இடர் முகாமைத்துவத் தலைவர் / பிரதான இடர் அதிகாரி *இடர் முகாமைத்துவக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் இலக்குகளைத் திட்டமிடுதல், மேம்படுத்துதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிற்குப் பொறுப்பான ஒரு மூலோபாயத் தலைமைத்துவப் பதவியாகும்.* *இப்பதவியானது NCGIL நிறுவனத்தின் உத்தரவாதக் கடன் தொகுப்பின் (Guarantee Portfolio) செயற்பாடுகளை மீளாய்வு செய்வதுடன், முதலீட்டுக் கடன் தொகுப்பின் இடர் மற்றும் இலாபத்தன்மையை உகந்த மட்டத்தில் பேணுவதை உறுதிப்படுத்தும். மேலும், நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயற்பாடுகளிலும் காணப்படும் இடர்களை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதும் இப்பதவியின் முக்கிய பொறுப்பாகும்.* ***இப்பதவியானது மூன்று (03) வருட ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுவதுடன், பணித்திறன் மதிப்பீட்டின் அடிப்படையில் ஒப்பந்தக் காலம் புதுப்பிக்கப்படும்..**	• நிதி, கணக்கியல், பொருளியல், வணிக நிர்வாகம், விஞ்ஞானம் அல்லது தொடர்புடைய துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். • அல்லது CA, CIMA, ACCA, CMA, DBF அல்லது அதற்கு இணையான தொழில்முறை தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். • நிதி, கணக்கியல், பொருளியல், வணிக நிர்வாகம், விஞ்ஞானம் அல்லது தொடர்புடைய துறையில் முதுகலைப் பட்டம் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும். • வங்கித் துறை அல்லது நிதித் துறையில் குறைந்தபட்சம் 10 வருட பணி அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான (SME) கடன் வழங்கல் தொடர்பான அனுபவமும், கடன் இடர் முகாமைத்துவத்தில் நேரடி நடைமுறை அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும். மேலும், பாரம்பரிய கடன் இடர் முகாமைத்துவக் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான அறிவும் அவற்றைப் பயன்படுத்தும் திறனும் இருத்தல் வேண்டும். • விரும்பத்தக்க வயது வரம்பு: 40 – 57 வயது.
உத்தரவாத நிர்வாக நிறைவேற்று அதிகாரி *ஆரம்பக்கட்ட கடன் பகுப்பாய்வை மேற்கொள்ளுதல், கடன் தொகுப்பை (Loan Portfolio) புதுப்பித்தல், கடன் பெறுநர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக பங்குதாரர் நிதி நிறுவனங்களுடன் (SFIs) தொடர்புகளைப் பேணுதல், கடன் பெறுநர்களைப் பதிவு செய்தல், பதிவேடுகளைப் பராமரித்தல், அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய பணிகளை உள்ளடக்கிய உத்தரவாத நிர்வாகச் செயல்முறையைச் சீராக முன்னெடுத்துச் செல்வதே இப்பதவியின் முக்கிய பொறுப்பாகும்.* ***இது நிரந்தரமான முழுநேரப் பதவியாகும்.**	• நிதி, வணிகம், வணிக நிர்வாகம் அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட இளங்கலைப் பட்டம் அல்லது அதற்கு இணையான தொழில்முறை தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். • வங்கித் துறை தொடர்பான தகைமைகளைப் பெற்றிருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும். • பொதுவான வங்கிச் செயற்பாடுகளில் குறைந்தபட்சம் 01 முதல் 02 வருட பணி அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். வங்கி அல்லது நிதி நிறுவனமொன்றில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான (MSME) கடன் வழங்கல் தொடர்பான அனுபவம் பெற்றிருப்பது மிகவும் விரும்பத்தக்கது. • Microsoft Office மென்பொருள் பயன்பாட்டில் சிறந்த திறமையும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) தொடர்பான அடிப்படை அறிவும் கட்டாயமாகும். • - விரும்பத்தக்க வயது வரம்பு: 25 - 40 வயது.

தெரிவு செய்யும் நடைமுறை

விரிவான நேர்முகத் தேர்வு செயல்முறையின் மூலம் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். தெரிவுச் செயல்முறையின் அனைத்து கட்டங்களிலும் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரமே அறிவிக்கப்படும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பெற்றுள்ளதுடன், இப்பதவிக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள், இவ்விளம்பரம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஏழு (07) நாட்களுக்குள் தங்களது முழுமையான சுயவிபரக் கோவையுடன் (CV), தமக்கு உறவினர்கள் அல்லாத இரண்டு (02) பரிந்துரையாளர்களின் தொடரபு விபரங்களையும இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

உங்களது சுயவிபரக் கோவையை (CV) PDF வடிவில careers@ncgil.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கலாம்

தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (தனியார்) வரையறுக்கப்பட்டது
7 ஆவது மாடி, இல. 479, HNB டவர்ஸ், டி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.